1995 மார்ச் 28]

122—

சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு ஜெராக்ஸ் இயந்திரங்கள் வழங்குதல்

21587*—திரு. பி.வி. இராஜேந்திரன்** :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு சார்பதிவாளர் அலுவலகத்திற்கும் எழுத்து வேலைப்பளுவைக் குறைக்கவும், பதிவுப் பணியைத் துரிதப்படுத்தவும், தெளிவாகப் பாதுகாக்கவும் ஜெராக்ஸ் மற்றும் கம்ப்யூட்டர் இயந்திரங்கள் வழங்கவும் அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். பதிவுத் துறையில் *1993—94* ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ், 3 நகல் எடுக்கும் தானியங்கி இயந்திரங்கள் ஜெராக்ஸ் மெஷின்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தானியங்கி இயந்திரம் பதிவுத் துறை தலைவருக்கும் வாங்கிக் கொடுப்பதற்கு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. மைலாப்பூர் சார் பதிவாளர் அலுவலகம், கோடம்பாக்கம், செம்பியம் ஆகிய சார் பதிவாளர் அலுவலகங்கள், ஒவ்வொன்றிற்கும் ஒரு கணிப் பொறி, கம்ப்யூட்டர் வாங்குவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் நம்முடைய மாண்புமிகு மரியாதைக்குரிய ரெவின்யூ மினிஸ்டர் அவர்கள் அங்கே ஜெராக்ஸ் மிஷின் வாங்கிக் கொடுப்பதற்கு ஆணை பிறப்பித்தமைக்காக என்னுடைய மனமார்ந்த நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிற அதேநேரத்தில், எல்லா இடங்களுக்கும் அதைச் செய்வதற்கு அரசு முன்வருமா? இந்தக் கேள்வியினுடைய அடிப்படை நோக்கமே கம்ப்யூட்டர் மயமாக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதுதான். அதை அரசு மீண்டும் பரிசீலிக்குமா? அதே நேரத்தில், பதிவு அலுவலகங்களில் பதிவு செய்யப்படுகிற பத்திரங்கள் விரைவில் சம்பந்தப்பட்ட பார்ட்டிக்குக் கிடைக்குமா, அது நீண்ட காலம் பல மாதங்களாக தாமதப்பட்டு வருகிறது.

[*1995 மார்ச் 28*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கம்ப்யூட்டர் பற்றிய கேள்வி இது.

திரு. ஆர். சிங்காரம் : கம்ப்யூட்டர் கொண்டு வருவதற்குக் காரணம், டிலே பண்ணுகிறார்கள் என்பதனால்தான் கம்ப்யூட்டர் கொண்டு வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்பது வேறு. கம்ப்யூட்டர் வந்த பிறகும் பத்திரங்களைச் சரி பார்த்துதான் தருவார்கள் கேளுங்கள்.

முற்பகல் *10-05*

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் கம்ப்யூட்டர் மயமாக்கப்படுமா என்று கேட்டிருக்கிறோம். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மீண்டும் பரிசீலனை செய்து தமிழ்நாடு பூராவும் எல்லாப் பதிவாளர் அலுவலகங்களிலும் இதைக் கணினிமயமாக்குவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகல் எடுப்பதற்காக தானியங்கி இயந்திரமும். அதேபோல கம்ப்யூட்டரும் தமிழ்நாடு பூராவும் கொண்டுவர வேண்டுமென்ற காரணத்தினால் முதலில் இந்த அரசு வந்தவுடன் இப்போது *5* கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிகமாக எங்கே பத்திரங்கள் வருகிறதோ அங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு பூராவும் விரைவிலே கொண்டு வருவதற்கு இந்த அரசு உத்தேசித்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே.பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தானியங்கி இயந்திரமும் மற்றும் கணிப்பொறி இயந்திரமும் தமிழ்நாடு முழுவதும் பதிவாளர் அலுவலகங்களில் எல்லாம் ஏற்படுத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கணிப்பொறி இயந்திரமும், தானியங்கி இயந்திரமும் சார் பதிவாளர் அலுவலகங்களிலே குறிப்பாக கோவையைச் சேர்ந்த பதிவாளர் அலுவலகங்களுக்கு விரிவுப்படுத்தப்படுமா என்று கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று கேட்டால், கோவை மாவட்டம், தொழில் வளத்திலே

1995 மார்ச் 28]

முன்னேறி வருகின்ற மாவட்டம். கோவையில் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றன. நிலம் வாங்குவோரும், விற்போரும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் கோவையில் இருக்கின்ற சார்பதிவாளர் அலுவலகத்தை நவீனமயமாக்குவதற்காக கம்ப்யூட்டர் தானியங்கி இயந்திரம் ஏற்படுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கோவை மாவட்டத்திற்கும் ஒன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது 5 வாங்கப்பட்டன. கோவை மாவட்டத்திற்கு ஒன்று, மதுரை மாவட்டத்திற்கு ஒன்று திருச்சி மாவட்டத்திற்கு ஒன்று, சைதாப்பேட்டைக்கு ஒன்று, பெரியமேட்டிற்கு ஒன்று என கொடுக்கப்பட்டிருக்கின்றன. எல்லா மாவட்டத்திற்கும் கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சார்பதிவாளர் அலுவலகங்களில் வில்லங்க சர்ட்டிபிகேட் கேட்கச் செல்லுகின்றபோது 10 நாட்கள், ஒரு வாரம் என்று அலைக்கழிக்கப்படுகிறார்கள். பொதுமக்களுடைய அந்தப் பாதிப்பைத் தவிர்ப்பதற்கு கம்ப்யூட்டர் கொடுக்கின்றபோது முக்கியமான தாலுக்கா அளவில் இருக்கின்ற ஒவ்வொரு சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் இந்தக் கம்ப்யூட்டர் மையத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி வில்லங்க சான்றிதழ்கள் கேட்டால் ஒரு வாரத்திற்குள் கொடுக்க வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டு இருக்கிறது. முதல் ஒரு ஆண்டுக்கு என்றால் 8 ரூபாய் பணம் கட்ட வேண்டும். தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டுக்கும் 3 ரூபாய் வீதம் கட்ட வேண்டும்; இது ஒரு வாரத்தில். 24 மணி நேரத்திலே கொடுக்க வேண்டுமானாலும் இந்த அரசு கொடுக்கும். 24 மணி நேரத்தில் கொடுக்க வேண்டுமென்றால், நிறைய பேர் கேட்பதனால், அதன் முக்கியத்துவத்தைக் கருதி 8 ரூபாய் கட்ட வேண்டியவர்கள், 16 ரூபாய் கட்டினால், 24 மணி நேரத்தில் கொடுப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 123, டாக்டர் எம். பி. சேகர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.